# நிச்சயமற்ற காலங்களிலும் உங்கள் குடும்பத்தினரின் கனவுகளை நீடிக்கச் செய்யுங்கள்.

## எச்டிஎஃப்சி லைஃப் சஞ்சய் ஃபிக்ஸ்ட் மெச்சூரிட்டி பிளான்

ஒரு தொடர்பில்லாத, பங்கேற்காத, தனித்த, சேமிப்பு, ஆயுள் காப்பீட்டுத் திட்டம்




- உத்தரவாதமுள்ள பெருந்தொகை வழங்குதல்[1]
- கூட்டு ஆயுள் பாதுகாப்பு[2]
- வரிச் சலுகைகள்[3]

**எச்டிஎஃப்சி லைஃப் சஞ்சய் ஃபிக்ஸ்ட் மெச்சூரிட்டி பிளான்**

ஒரு தொடர்பில்லாத, பங்கேற்காத, தனித்த, சேமிப்பு, ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

HDFC Life

*Sar utha ke jiyo!*

1. செலுத்த வேண்டிய எல்லாத் தவணைகளும் செலுத்தப்பட்டு பாலிசி அமலில் இருக்கும்போது, கொடுக்கப்படும்.
2. ஒற்றை வழங்குதல் வாய்ப்பிற்கு மட்டும் பொருந்தும்.
3. வருமான வரிச் சட்டம் 1961-ன் படி. வரிப் பயன்கள் வரிச் சட்டங்களில் செய்யப்படும் மாற்றங்களுக்கு உட்பட்டவை.

# எச்டிஎஃப்சி லைஃப் சஞ்சய் ஃபிக்ஸ்ட் மெச்சூரிட்டி பிளான்

ஒரு தொடர்பில்லாத, பங்கேற்காத, தனித்த, சேமிப்பு, ஆயுள் காப்பீட்டுத் திட்டம்

எச்டிஎஃப்சி லைஃப் சஞ்சய் ஃபிக்ஸ்ட் மெச்சூரிட்டி பிளான் உங்களுக்கு ஆயுள் பாதுகாப்புடன் உத்தரவாதமுள்ள முதிர்ச்சிப் பயனை கொடுக்கிறது. இந்தத் திட்டத்தின் மூலமாக, பாலிசியின் தொடக்கத்திலேயே என்ன பயன் கொடுக்கப்படும் என்பதன் துல்லியமான மதிப்பைத் தெரிந்துகொள்ளலாம். இந்தத் திட்டம் உங்கள் கனவுகள் நிலைத்திருக்கும் உத்தரவாதத்தை உங்களுக்குக் கொடுக்கிறது.

## எச்டிஎஃப்சி லைஃப் சஞ்சய் ஃபிக்ஸ்ட் மெச்சூரிட்டி திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

**தனித்த/ கூட்டு ஆயுள் பாதுகாப்பு**
தனிப்பட்ட நபருக்கு/ கூட்டாக ஆயுள் காப்பீட்டுப் பாதுகாப்பை தேர்வு செய்யும் வாய்ப்பு உள்ளது.

**தவணைகளில் வளைந்து கொடுக்கும் தன்மை**
ஒற்றை வழங்குதல்/ வரம்புக்குட்பட்ட/ வழக்கமான தவணை செலுத்தும் காலத்திற்கான வாய்ப்பு

**பாலிசி காலங்களில் வாய்ப்பு**
40 ஆண்டுகள் வரையான பாலிசி காலத்தை தேர்வு செய்யும் வாய்ப்பு

**உத்தரவாதமுள்ள* சேமிப்புகள்**
வருவாய் பற்றிய உத்தரவாதத்தை பெற்று இருங்கள்

**விருப்ப அடிப்படையிலான துணைத் திட்டங்கள்**
கூடுதல் தவணை செலுத்தி துணைத் திட்டங்களுக்கான வாய்ப்புகளுடன் உங்கள் பாதுகாப்பு அளவை அதிகரியுங்கள்.

**மருத்துவ பரிசோதைனகள் இல்லை**
திட்டத்தின் பிஓஎஸ் வகையின் கீழாக

**அதிகரித்த பயன்**
அதிக தவணைகளுக்கு அதிகரித்த முதிர்ச்சிப் பயன்

*பாலிசி அமலில் இருந்து எல்லாத் தவணைகளும் செலுத்தப்பட்டிருக்க வேண்டும்.

## தகுதி

<table>
<tr><th rowspan="2">தகுதி விதிமுறை</th><th colspan="2">குறைந்தபட்சம்</th><th colspan="3">அதிகபட்சம்</th><th></th></tr>
<tr><th>ஒற்றை ஆயுள்</th><th>கூட்டு ஆயுள்</th><th colspan="3">ஒற்றை ஆயுள்</th><th>கூட்டு ஆயுள்</th></tr>
<tr><td rowspan="3">நுழைவின்போது வயது (ஆண்டுகள்)</td><td rowspan="3">90 நாட்கள்</td><td rowspan="3">90 நாட்கள்*</td><td rowspan="2">ஒற்றை தவணை</td><td>இறப்புப் பயனின் பெருக்கம் (டிபிஎம்) 1.25-1.5</td><td>70 ஆண்டுகள்</td><td rowspan="2">ஒற்றை தவணை 60 ஆண்டுகள்</td></tr>
<tr><td>இறப்புப் பயனின் பெருக்கம் (டிபிஎம்) 10</td><td>50 ஆண்டுகள்</td></tr>
<tr><td>வழக்கமான/ வரம்புக்குட்பட்ட தவணை:</td><td colspan="2">65 நாட்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td rowspan="3">முதிர்ச்சியின்போது வயது (ஆண்டுகள்)</td><td colspan="2" rowspan="3">18 ஆண்டுகள்</td><td rowspan="2">ஒற்றை தவணை</td><td>இறப்புப் பயனின் பெருக்கம் (டிபிஎம்) 1.25-1.5</td><td>90 வயது</td><td rowspan="2">80 ஆண்டுகள்</td></tr>
<tr><td>இறப்புப் பயனின் பெருக்கம் (டிபிஎம்) 10</td><td>70 வயது</td></tr>
<tr><td>வழக்கமான/ வரம்புக்குட்பட்ட தவணை:</td><td colspan="2">85 ஆண்டுகள்</td><td>இல்லை</td></tr>
</table>

*மற்றவருக்கு குறைந்தது 18 வயதாக இருப்பதற்கு உட்பட்டது.
^இரு நபர்களுக்கும் பொருந்தும்

மேலே கொடுக்கப்பட்டுள்ள எல்லா வயதுகளும் கடைசி பிறந்த நாளின்படியானவை. வயதுக்கு வராதவர்கள் உட்பட எல்லாருக்கும் அபாய பாதுகாப்பு பாலிசியின் தொடக்க தேதியிலிருந்து தொடங்குகிறது.

## இந்தத் திட்டத்தில் என்ன தவணைகள் மற்றும் பாலிசி காலங்கள் உள்ளன

| தவணை செலுத்தும் காலம் (ஆண்டுகளில்) | பாலிசி காலம் (ஆண்டுகளில்) |
|---|---|
| ஒற்றைத் தவணை | 5 முதல் 40 ஆண்டுகள் |
| 5 | பிபிடி முதல் 40 ஆண்டுகள் |
| 6 | |
| 7 | |
| 8 | |
| 10 | |
| 12 | |
| 15 | |
| 20 | |

## இந்தத் திட்டம் எவ்வாறு வேலை செய்கிறது?

### முதிர்ச்சிப் பயன்

முதிர்ச்சியின்போது, பாலிசி முடிவில் பெருந்தொகையாக உத்தரவாதமுள்ள பயன் வழங்கத் தக்கது. முதிர்ச்சிப் பயன் என்பது முதிர்ச்சியின்போது உறுதியளிக்கப்படும் தொகைக்கு இணையானதாக இருக்கும்.

இதில் முதிர்ச்சியின்போது உறுதியளிக்கப்படும் தொகை (வருடாந்திரமாக்கப்பட்ட தவணை அல்லது ஒற்றை தவணை) பெருக்குதல் உத்தரவாதமுள்ள முதிர்ச்சிப் பெருக்கம் (ஜிஎம்எம்) ஆக இருக்கும். ஜிஎம்எம் வயது மற்றும் தவணை செலுத்தும் காலத்தைப் பொறுத்து வேறுபடுகிறது. அவை நிறுவனத்தின் இணையதளத்தில் கிடைக்கின்றன. முதிர்ச்சிப் பயன் வழங்கப் பட்டதும் பாலிசி முடிந்து விடும். மேற்கொண்டு பயன்கள் எதுவும் கொடுக்கப்படாது.

### இறப்புப் பயன்

இறப்புப் பயன் பெருக்கம்: இந்தத் திட்டத்தின் ஒற்றைத் தவணை வகையின் கீழாக, பாலிசிதாரர் பின்வரும் இரண்டு வழிகளில் இறப்புப் பயன் பெருக்கத்தை (டிபிஎம்) தேர்வு செய்யலாம்.

| ஒற்றை ஆயுளின் கீழாக டிபிஎம் | கூட்டு ஆயுளின் கீழாக டிபிஎம் |
|---|---|
| 1.25-1.5 X உறுதியளிக்கப்படும் நபரின்(கள்) வயதைப் பொறுத்தது | |
| 10x | 10-15X உறுதியளிக்கப்படும் நபர்களின் வயதைப் பொறுத்தது |

வழக்கமான/ வரம்புக்குட்பட்ட வகையில், டிபிஎம் 10 ஆக நிர்ணயிக்கப்படும். அது ஆண்டுத் தவணையுடன் பெருக்கப்படும். பாலிசி காலத்தில் உறுதி அளிக்கப்பட்ட நபர்/ நபர்கள் இறக்கும்பட்சத்தில், பின்வரும் இறப்புப் பயன் வழங்கப்படும்:

### ஒற்றை ஆயுளுக்கான பாதுகாப்பு

ஒற்றை ஆயுளுக்கான பாலிசியின் கீழாக வாரிசுக்கு கொடுக்கத் தக்க இறப்புப் பயன் பின்வருவனவற்றில் அதிகமானதாக இருக்கும்:

- இறப்பின்போது உறுதியளிக்கப்படும் தொகை
- வழக்கமான/ வரம்புக்குட்பட்ட வழங்கும் பாலிசிக்கான வருடாந்திர தவணையின் 10 மடங்குகள் அல்லது ஒற்றை வழங்குலுக்கான ஒற்றை தவணை (மற்றும் ஏதாவது நிதி உத்தரவாத கூடுதல் தவணை) மடங்குகள் இறப்பு பயன் பெருக்கம் (பாலிசிதாரர் தேர்வு செய்வதுபடி).
- இறப்பு தேதி வரை செலுத்தப்பட்ட மொத்த தவணைகளின் 105%
- இறப்பு தேதியின்படி பொருந்தும் ஒப்படைப்பு மதிப்பு

இறப்புப் பயன் வழங்கப்பட்டதும், பாலிசி நின்றுவிடும் மற்றும் வேறு எந்தப் பயன்களும் வழங்கப்படாது.

## கூட்டு ஆயுள் பாதுகாப்பு

| முதல் இறப்பு | இரண்டாம் இறப்பு |
|---|---|
| **கீழ்க்கண்டவற்றில் அதிகமானது:**<br>▪ இறப்பின்போது உறுதியளிக்கப்படும் தொகை<br>▪ இறப்பு தேதி வரை செலுத்தப்பட்ட மொத்தத் தவணைகளின் 105%<br>முதல் இறப்பில் இந்தப் பயன் வழங்கப்பட்டதும், செலுத்த வேண்டிய தவணைகளை செலுத்த வேண்டியபடி எதிர்கால தவணைகளை செலுத்துவதற்கு உட்பட்டு உயிர்வாழும் நபருக்கான பாலிசி தொடர்கிறது. | **கீழ்க்கண்டவற்றில் அதிகமானது:**<br>▪ இறப்பின்போது உறுதியளிக்கப்படும் தொகை<br>▪ ஒற்றை தவணை (மற்றும் ஏதாவது நிதி உத்தரவாதமுள்ள கூடுதல் தவணை) மடங்குகள் இறப்புப் பயனின் பெருக்கம் (பாலிசிதாரர் தேர்வு செய்வதுபடி)<br>▪ இறப்பு தேதி வரை செலுத்தப்பட்ட மொத்தத் தவணைகளின் 105%<br>▪ இறப்பு தேதியின்படி பொருந்தும் ஒப்படைக்கும் மதிப்பு. |

**இருவரும் ஒரே நேரத்தில்இருவரும் இறந்து விட்டால்:** பின்வருவது கொடுக்கப்படும்:


- முதல் மற்றும் இரண்டாம் நபர்களின் இறப்பின்போது மேலே குறிப்பிட்டபடி பயன் கொடுக்கப்படும்.
- வயதில் மூத்தவருக்கான பயன் ‘முதல் இறப்பின்’ கீழாக கொடுக்கப்பட்டுள்ள பயனின்படி இறப்புப் பயன் கொடுக்கப்படும். வயதில் இளையவருக்கான பயன் ‘இரண்டாம் இறப்பின்’ கீழாக கொடுக்கப்பட்டுள்ள பயனின்படி இறப்புப் பயன் கொடுக்கப்படும்.

  இரண்டாம் இறப்புக்கான இந்தப் பயன் வழங்கப்பட்டதும், பாலிசி முடிவுக்கு வந்து விடும். மேற்கொண்டு பயன்கள் எதுவும் கொடுக்கப்படாது.

### விளக்கம்:

**முதிர்ச்சிப் பயன் = வருடாந்திரமாக்கப்பட்ட தவணை அல்லது ஒற்றைத் தவணை x உத்தரவாத முதிர்ச்சிப் பெருக்கம் (ஜிஎம்எம்).**

**ஒற்றை நபர் (கட்டுப்படுத்தப்பட்ட வழங்குதல்)**





**ஆயுள் உறுதியளிக்கப்பட்டவர்: ஆரோக்கியமான 35 வயதுள்ள ஆண்**
**ஜிஎம்எம்: 22.69**

வருடாந்திரமாக்கப்பட்ட தவணை என்பது வரிகள், துணைத் தவணைகள், நிதி உத்தரவாதத்திற்கான கூடுதல் தவணைகள் மற்றும் மொடல் தவணைகளுக்கான பாரங்கள் ஏதாவது இருந்தால் அவற்றைத் தவிர்த்தது.

முதிர்ச்சிப் பயன் = ஒற்றைத் தவணை X உத்தரவாதமுள்ள முதிர்ச்சி பெருக்கம் (ஜிஎம்எம்)

**கூட்டு ஆயுள்**




முதல் இறப்பு: ₹ 1.25 லட்சம்
இரண்டாம் இறப்பு:
ஏ) உறுதியளிக்கப்பட்ட ஆயுள் 1: ₹ 1.38 லட்சத்தில் தொடங்கி ₹ 2.78 லட்சத்தை அடைகிறது
பி) உறுதியளிக்கப்பட்ட ஆயுள் 2: ₹ 1.40 லட்சத்தில் தொடங்கி ₹ 2.78 லட்சத்தை அடைகிறது

உறுதியளிக்கப்பட்ட ஆயுள் 1: ஆரோக்கியமான 35 வயதுள்ள ஆண்
உறுதியளிக்கப்பட்ட ஆயுள் 2: ஆரோக்கியமான 30 வயதுள்ள பெண்

இறப்புப் பயன் பெருக்கம் 1.25-1.5
ஜிஎம்எம்: 2.78

## துணைத் திட்ட வாய்ப்புகள்

| துணைத் திட்டம் | யுஐஎன் |
|---|---|
| விபத்தில் முடமாகும்போது எச்டிஎஃப்சி லைஃப் இன்கம் பெனிஃபிட் வழங்கும் துணைத் திட்டம் | 101B013V03 |
| எச்டிஎஃப்சி லைஃப் க்ரிடிக்கல் இல்னெஸ் பிளஸ் ரைடர் | 101B014V02 |
| எச்டிஎஃப்சி பிளஸ் ரைடர் | 101B016V01 |

**துணைத் திட்டங்கள் பற்றிய எல்லா விவரங்களுக்கும். தயவுசெய்து எங்கள் இணைய தளத்தில் கிடைக்கும் துணைத் திட்டங்களுக்கான பிரசுரத்தைப் பார்க்கவும்.

## மாற்றங்கள்

தவணை செலுத்தும் கால இடைவெளியை மாற்றிக்கொள்ளும் வாய்ப்புக் கொடுக்கப்படுகிறது. அதுபோன்ற மாற்றம் குழுவின் நிதி உத்தரவாத கொள்கையின்படி செய்யப்படும்.

## பாலிசியில் கடன்:

பாலிசி காலத்தில் பாலிசி மீதாக கடன் வழங்கப்படும். இது அவ்வப்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

## கழிவுகள் பெறுவதற்கான தடை: காப்பீட்டுச் சட்டம், 1938-ன் பிரிவு 41 மற்றும் அவ்வப்போது செய்யப்படும் திருத்தங்களின்படி

(1) இந்தியாவில் உள்ள சொத்து அல்லது உயிர் தொடர்பான எந்தவித அபாயம் உள்ள ஒரு காப்பீட்டை எடுத்துக்கொள்ள அல்லது புதுப்பிக்க அல்லது தொடர நேரடியாகவோ மறைமுகமாகவோ தூண்டுவதற்கு யாரும் அனுமதிக்கப்பட அல்லது வழங்க அனுமதிக்கப்பட மாட்டார்கள், ஏதாவது ஒரு முக்கியமான கழிவு, அல்லது வழங்க வேண்டியதில் ஒரு பகுதிஅல்லது முழுமையான கமிஷன் அல்லது திட்டத்தில் காட்டப்பட்ட பிரிமியத்தின் எந்த ஒரு கழிவும் அதுபோன்ற கழிவு காப்பீடு வழங்குபவரின் விதிமுறைகளில் அல்லது முக்கிய அம்சங்கள் குறித்த காப்பீட்டு நிறுவனத்தின் பிரசுரம் அல்லது அட்டவணையில் வெளியிட்ட படி அனுமதிக்கப்பட்டால் ஒழிய ஒரு திட்டத்தை பெறுபவர், புதுப்பிப்பவர், தொடருபவர் எவரும் ஒரு கழிவைபெற அனுமதிக்க முடியாது.

2) இந்த பிரிவின் விதிமுறைகளுக்கு இணங்கி நடக்க தவறுபவர்கள் பத்து லட்சம் ரூபாய் வரை அபராதம் விதித்து தண்டிக்கப்படக் கூடியவர்கள் ஆவர்.

Contact us today

**To buy: 1800-266-9777** (Toll free)
(Available all days 10am to 7pm)

**Visit us at www.hdfclife.com**

HDFC Life

*Sar utha ke jiyo!*

**எச்டிஎஃப்சி லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் ("எச்டிஎஃப்சி லைஃப்").** L65110MH2000PLC128245 ஐஆர்டிஏஐ பதிவு எண் 101

**பதிவு அலுவலகம்:** 13வது தளம், லோதா எக்செலஸ், அப்பல்லோ மில்ஸ் காம்பவுண்ட், என்.எம்.ஜோஷி மார்க், மஹாலக்ஷ்மி, மும்பை-400011.
மின்னஞ்சல்: service@hdfclife.com, தொ. எண்: 1860 (திங்கள்-சனி காலை 10 முதல் மாலை 7 மணி வரை). உள்ளூர் கட்டணங்கள் பொருந்தும். எந்தவொரு நாட்டின் முன் எண்ணையும் சேர்க்கக் கூடாது. எ.கா., +91 அல்லது 00. இணையதளம்: www.hdfclife.com

நிறுவனத்தின் லோகோவில் உள்ள "எச்டிஎஃப்சி" என்ற பெயர்/ எழுத்துக்கள் ஹவுசிங் டெவலப்மென்ட் ஃபைனான்ஸ் கார்பரேஷன் லிமிடெட்-க்கு ("எச்டிஎஃப்சி லிமிடெட்") சொந்தமானது மற்றும் எச்டிஎஃப்சி லிமிடெட் உடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் கீழாக எச்டிஎஃப்சி ஆல் பயன்படுத்தப்படுகிறது.

எச்டிஎஃப்சி லைஃப் சஞ்சய் ஃபிக்ஸ்ட் மெச்சூரிட்டி பிளான் (க்ஜமீ: 101மீ142ங01) ஒரு தொடர்பில்லாத, பங்கேற்காத, தனிநபர், சேமிப்புகள், ஆயுள் காப்பீட்டுத் திட்டமாகும். ஆயுள் காப்பீட்டுப் பாதுகாப்பு இந்தத் திட்டத்தில் கிடைக்கிறது. அபாய காரணிகள், தொடர்பான விதிமுறைகள், நிபந்தனைகள் மற்றும் விலக்குதல்களுக்கு அதிக விவரங்களுக்கு தயவுசெய்து விற்பனையை முடிக்கும் முன்பாக விற்பனைப் பிரசுரத்தைக் கவனமாகப் படிக்கவும். ARN: MC/09/21/25663-TL.

**போலியான தொலைபேசி அழைப்புகள் மற்றும் கற்பனையான/ மோசடியான சலுகைகள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவும்**

- ஐஆர்டிஏஐ காப்பீட்டுப் பாலிசிகளை விற்பனை செய்வது, ஊக்கத் தொகை அறிவிப்பது அல்லது தவணைகளில் முதலீடு செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை. அதுபோன்ற தொலைபேசி அழைப்புகளைப் பெறுபவர்கள் காவல்துறையில் புகார் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.